# முரசொலி

பக்கங்கள் நான்கு

விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 73 பிரசோற்பத்தி தை 25 (08 02 1992) சனி


### கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர்

## தற்போதைய கட்சி அமைப்பு மாற்றப்படுதல் வேண்டும்?

கடந்த 44 வருடங்களாக அரசியல் கட்சிகள் இனக் குரோதத்தைதான் வளர்த்து வந்துள்ளன இதனால் இந் நாட்டின் தற்போதைய கட்சி அமைப்பு முறையை மாற்றியமைக்கவேண்டும் என கொழும்பு பல்கலைக் கழக உபவேந்தர் ஈ. எல். பீரிஸ் கரலெழுப்பியுள்ளார் கருத்தரங்கு ஒன்றில் பேசிய

...04 ஆம் பக்கம் பார்க்க

# கரடியனாறில் இராணுவம்மீது புலிகள் பாரியதாக்குதல்!

### விமானங்கள் உதவிக்கு அழைப்பு; சேதங்கள் தெரிவிக்க மறுப்பு

மட்டக்களப்பில் கரடியனாறு பகுதியில் நேற்று விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே கடும் மோதல் வெடித்தது. மோதல் தொடர்ந்து நடைபெறுவதாகவும் புலிகள் எதிர்ப்பு கடுமையாக இருப்பதால் இராணுவம் விமானப்படையினரின் உதவியை தற்போது நாடியுள்ளதாகவும் வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது.

கரடியனாறு காட்டுப்பகுதியிலேயே இம்மோதல் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது இதுவரை 7 படையினர் கொல்லப்பட்டதாக அறிவித்த அவ் வானொலி கொல்லப்பட்ட படையினர் தொகை இதைவிட அதிகமாக இருக்கும் எனத் தெரிவித்தது.

7 படையினர் மட்டுமே பலியானதாக எமக்கு இதுவரை ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது என கொழும்பில் இராணுவ அதிகாரிகள் கூறினராம்.

கரடியனாறு மோதலில் புலிகள் மிகக்கடுமையாக போரிடுவதால் விமானப்படையினர் தற்போது அழைக்கப்பட்டு ஹெலிகப்டர்களின் உதவியோடு, கரடியனாறு காட்டுப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு நடைபெறுகிறது என வும் அதிகாரிகளை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது

இத்தகவலை பி. பி. ஸியும் நேற்றிரவு ஊர்ஜிதப்படுத்தியது.

### வவுனியாவில் குண்டுவீச்சு

வவுனியாவில் சொந்தக்காரன் குளம் கோழியாகுளம் பகுதியில் நேற்று முன்தினம் காலை விமானக் குண்டுவீச்சு நடைபெற்றது.

இதேவேளை வவுனியா நெலுக்குளம் படையினர் கடந்த புதன்கிழமை முதல் குடிமனைகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதலை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### வீரச்சாவு

நொச்சிமோட்டையில் நடைபெற்ற நேரடி மோதலில் காயமடைந்து வைத்திய சிகிச்சை பெற்று வந்த சில்வஸ்ரர் (தர்மலிங்கம் கண்ணன், ஓமந்தை) நேற்று முன்தினம் வீரச்சாவடைந்தார்.

### வளலாயில் மோதல்

வளலாய் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் மோதல் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது

படையினர் பரா வெளிச்சங்களை வானில் செலுத்தியதையும் காணமுடிந்தது.

சேதவிவரங்கள் தெரிவிக்கப்படவில்லை. 43, 06

## அமெரிக்காவை ஆசீர்வதித்து பிக்குகள் ஒருவருட பிரித்!

ஸ்ரீலங்காவுக்கு பொருளாதாரம் மற்றும் வர்த்தக வாய்ப்புகளை அளித்து வரும் அமெரிக்காவை ஆசீர்வதித்து கொழும்பில் பௌத்த பிக்குகள் பிரித் ஓதத் தொடங்கியுள்ளனர். அமெரிக்காவை ஆசீர்வதிக்கும் இந்த பிரித்ஓதும் நிகழ்ச்சி ஒரு வருட காலத்துக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்துறையில் அமெரிக்காவே ஸ்ரீலங்காவுக்கு இப்போது ஆதரவளிப்பதாக இந்நிகழ்ச்சியில் பங்கு பற்றும் பௌத்த பிக்குகள் தெரிவித்துள்ளனராம்.

### புதிய நீதி ஒதுக்கீட்டில் புதிய வேலைகளுக்கு இடமில்லை

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து புதிய வேலைகள் எதுவும் மேற்கொள்ளக் கூடாது என பொது நிர்வாக அமைச்சு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது.

இந்த புதிய உத்தரவு வடக்கு கிழக்கு உட்பட சகல பகுதி அரசாங்க அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. 6

### கிராம சேவையாளர் பரீட்சை விரைவில் நடத்த ஏற்பாடு

யாழ் மாவட்டத்தில் 108 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு கோரப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சை வெகுவிரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவ

...04 ஆம் பக்கம் பார்க்க

கத்தோலிக்க குழுவிடம் தேரர் சொன்னார்

## புலிகள் தமது யோசனைகளை முன்வைத்தால் மல்வத்தை பீடாதிபதி பரிசீலிப்பாராம்!

விடுதலைப்புலிகள் தமது யோசனைகளை முன்வைத்தால் அதைத் தாம் பரிசீலிப்பதாக கூறியிருக்கிறார் மல்வத்தை பீட மஹாநாயக்க தேரர்!

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய கத்தோலிக்க குழுவினர் கண்டியில் மல்வத்தைபீட தேரரை சந்தித்து வடபகுதி நிலைமைகளை எடுத்துக் கூறினார். அப்போதே தேரர், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு புலிகள் அமைப்பு தனது யோசனைகளை முன்வைத்தால் தாம் அதைப் பரிசீலிப்போம் என கூறியதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுளளது.

அண்மையில் யாழ்ப்பாணம்

### செஞ்சிலுவைத் தொண்டர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ் பொதுமருத்துவமனையில் பணிபுரியும் செஞ்சிலுவைத் தொண்டர்கள் சிலர் நேற்றுக் காலை 7.30 மணியளவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்த ஊர்வலம் யாழ். செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்துக்கும் சென்றது

யாழ் மருத்துவமனை மீள ஆரம்பிக்கப்பட்டபோது சேர்த்துக் கொள்ளப்பட்ட செஞ்சிலுவைச் சங்க தொண்டர்

...04 ஆம் பக்கம் பார்க்க

### கடற்படை சிப்பாய் சடலம் பூநகரியில் ஒதுங்கியது!

பூநகரியைச் சேர்ந்த குரமனை கடற்கரையில் ஸ்ரீலங்கா கடற்படை சிப்பாய் ஒருவரின் சடலம் கரையொதுங்கியது.

கடந்த புதன் கரையொதுங்கிய இக்கடற்படை சிப்பாயின் சடலம் அதற்கு முந்தைய தினம் யாழ் குடா கடலில் மூழ்டிக்கப்பட்ட கடற்படைக் கப்பலில் இருந்தவரினதாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய கருத்துக் கணிப்பு கூறுகிறது

### அகதிகளின் வருகையை பிரான்ஸ் மக்கள் விரும்பவில்லை

பிரான்ஸுக்கு வெளி நாடுகளிலிருந்து அகதிகள் வருவது அந்நாட்டு மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தி வருவதாக அண்மையில் எடுத்த கருத்துக் கணிப்பொன்றில் தெரிய வந்துள்ளது

கருத்துக் கணிப்பின்படி 52 சதவீதமான பிரான்ஸ் மக்கள் தமது நாட்டிற்குள் பிறநாட்டவர்கள் அகதிகளாக வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இவர்களில் அநேகமானோர் பிரான்ஸ் நாடு பிரான்ஸ் மக்களுக்கே என வலியுறுத்தினராம்.

### பீரங்கிப் படகுகளை சீர்செய்ய மேலும் சீன பொறியியலாளர்

சீனாவிடமிருந்து ஸ்ரீலங்கா கடற்படை அண்மையில் கொள்வனவுசெய்து தற்போது இயந்திரக்கோளாறு ஏற்பட்டுள்ள கடற்படைக் கப்பல்களை சீர் செய்ய சீன பொறியியல் குழுவொன்றுகொழும்பு வந்துள்ளது.

ஏற்கனவே சீன பொறியியல் குழுவொன்று திருமலையில் உள்ள கடற்படைத்தளத்தில் கடற்படையில் பீரங்கி படகுகளை சீர்செய்வதில் ஈடுபட்டுள்ளமை தெரிந்ததே.

## இந்திய விசேட புலனாய்வுகுழு கொழும்பு வந்துள்ளது

இந்திய புலனாய்வுக்குழு அதிகாரிகள் சிலர் கொழும்பு வந்துள்ளனர். இவர்கள் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக ஸ்ரீலங்கா அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவே இங்கு வந்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இந்திய விசேட புலனாய்வுக்குழு (SIT) யைச் சேர்ந்த இந்த அதிகாரிகள் கொழும்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சில தமிழ் கைதிகளிடம் இலங்கைப் புலனாய்வு அதிகாரிகளின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொ[illegible] வுள்ளதாகவும் தெரிவிக்[illegible] படுகிறது.

இந்திய விசேடபுலனாய்[illegible]

[illegible] ஆம் பக்கம் பா[illegible]

## புதுடில்லி விமான நிலையத்தில் அன்றும்... இன்றும்...

முன்பு:- புதுடில்லி விமான நிலையத்தில் ஒரு பொதியை வைத்துவிட்டு நீங்கள் சற்றுக் கவலையீனமாக இருந்து விட்டாலே போதும், அவை 'அபேஸ்' பண்ணப்பட்டு விடும். பின்பு அவற்றை உங்களால் மீட்கவே முடியாது போய்விடும்

இப்போது:- அங்கு சூட்கேசை வைத்துவிட்டு பாத்ரூம சென்றாலும் அது அப்படியே வைத்த இடத்திலேயே இருக்கும் துப்பாக்கி ஏந்திய பொலிஸ் காவலுடன், ஆனால் அதை மீளப்பெற முன் பொலிஸார் உங்களை மட்டுமல்ல- பொருள்களையும் குடைந்து எடுத்து விடுவார்கள். 'வெடிகுண்டுப் பரிசோதனை' என்ற பெயரில்!

## எல்லைமீறல் ஊர்வலம்; ஐ.நா.விடம் இந்தியா புகார்!

### நாம் ஆதரவளிக்கமாட்டோம் -பாக். அதிகாரிகள் | நடத்தியே தீருவோம் -காஷ்மீர் தீவிரவாதிகள்

11-ம் திகதி செவ்வாய்க்கிழமை பாகிஸ்தான் காஷ்மீர் தீவிரவாதிகள் எல்லை தாண்டி இந்தியாவுக்குள் மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ள ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்த பாகிஸ்தானை வற்புறுத்துமாறு இந்தியா ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளையும் கேட்டுள்ளது.

அரசியல் ரீதியில் இந்த நடவடிக்கையைத் தடுப்பதற்கான சகல முயற்சிகளிலும் இந்தியா ஈடுபட்டுள்ளதாகவும், இந்த முயற்சி தோல்வியுற்றால் ஆர்ப்பாட்டக்காரர்களைத் தவிர்க்க இராணுவ நடவடிக்கை தவிர்க்க முடியாததெனவும் இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ் விடயத்தை இந்தியா ஐ.நா.வின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதையடுத்து 'இந்த எல்லை மீறல் ஊர்வலத்தை ஆதரிக்கமாட்டோம் அது தடை செய்யப்பட்டுள்ளது' என பாகிஸ்தான் அறிவித்திருக்கிறது. காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர் அப்துல்லா கான் தலைமறைவாகியிருக்கிறார்.

எனினும் திட்டமிட்டபடி எல்லை மீறல், ஊர்வலம் நடந்தே தீரும் என காஷ்மீர் விடுதலை முன்னணி அறிவித்திருக்கிறது இதனால் இந்திய-பாகிஸ்தான் காஷ்மீர் எல்லையில் பதட்டம் அதிகரித்து இரு நாடுகளுக்குமிடையே எந்நேரமும் போர் மூளலாம் என்ற ஒரு நிலை உருவாகி வருகிறது என செய்திகள் தெரிவிக்கின்றன

## வர்த்தக விளம்பர ஒலிபரப்பை நல்லூரில் ஆரம்பிக்க முயற்சி!

நல்லூர்ப் பிரதேசத்தில் வர்த்தக விளம்பர ஒலிபரப்புச் சேவை ஒன்றை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அண்மையில் இடம்பெற்ற நல்லூர்ப் பிரதேச வர்த்தகர் சங்க பொதுக் கூட்டத்தில் இந்த ஒலிபரப்புச் சேவை பற்றி ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

திருநெல்வேலி, கல்வியங்காடு, முத்திரைச் சந்தை, நல்லூர், கந்தர்மடம், கொக்குவில், கோண்டாவில் ஆகிய இடங்களில் இந்த வர்த்தக விளம்பர ஒலிபரப்புச் சேவை ஒரே சமயத்தில் எல்லோரும் தெளிவாகக் கேட்கக் கூடிய தான முறையில் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

## சைக்கிள் திருட்டு முயற்சி முறியடிப்பு; முன்பு களவாடப்பட்டவையும் மீட்பு!

சைக்கிள் ஒன்றைத் திருட முற்பட்ட ஒருவர் பொது மக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டதையடுத்து காவற்துறையினரால் மேற்கொண்ட மேல் விசாரணையின் பயனாக இவரால் ஏற்கனவே திருடப்பட்ட ஐந்து சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் பல சைக்கிள்கள் மீட்கப்படவுள்ளன.

சாவகச்சேரியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சாவகச்சேரி காவற்துறையினர் மற்றைய சைக்கிள்களையும் மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (16)

## சுமுகத் தீர்வுக்கான சந்தர்ப்பம் இப்போது குறைகிறது

### ரொய்ட்டர் தகவல்

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பேச்சு மூலம் சுமுகமாகத் தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பம் குறைந்து, இராணுவ நடவடிக்கைக்கான சந்தர்ப்பமே அதிகரித்து வருவதாக 'ரொய்ட்டர்' செய்தி தாபனம் தெரிவித்திருக்கிறது

பாரிஸில் ஆரம்பமாகியுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நாளை முடிவடைகிறது. அதன் பின்னர் இராணுவ ரீதியிலான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படுவதற்கான சாத்தியக் கூறுகளே அதிகமாகக் காணப்படுகிறது. எனவும் 'ரொய்டர்' தெரிவித்திருக்கிறது.

## தி.மு.க. ஆதரவாளர் மரணம்!

தடாச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதை எதிர்த்து தி.மு. கழகத்தினர் கடந்த திங்கட்கிழமை சென்னையில் நடாத்திய ஊர்வலம் மீது சைதாப்பேட்டையில் வைத்துப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமுற்ற தி.மு.க. ஆதரவாளர் ஒருவர் நேற்று முன்தினம் சென்னை வைத்திய சாலையில் மரணமானார்.

## பதிவு

பலாலிகிழக்கு, பலாலிவடக்கு பலாலி மேற்கு கிராமங்களில் உள்ள குடும்ப அங்கத்தவர்களை பதிவு செய்யும் வேலை மல்லாகம் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகாமையில் 10ஆம் திகதி முதல் ஐந்து தினங்களுக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (16)


உ

ஸ்ரீ துர்க்காதேவி துணை

அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## மாசிமக இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம்

அம்பாள் அடியார்களே!

உலக மாதாவாகிய அன்னை பராசக்தி, சங்கு, சக்கரம் ஏந்திய திருக்கரங்களோடு விஷ்ணு துர்க்கையாக, கருணையே வடிவமாக, சிரத்தின்மேல் கரங்குவித்து வந்தே சரண்புகும் அடியார்க்கு வேண்டிய வரந் தந்தருளும் தனிப்பெருந் தேவியாக துர்க்காபுரத்தில் அமர்ந்து அருள் புரியும்

ஸ்ரீ துர்க்காதேவிக்கு

நிகழும் சர்வமங்கள பிரசோற்பத்தி வருடம் தைத்திங்கள் 25 ஆம் நாள் (8. 2. 1992) சனிக்கிழமை முதல் மாசித் திங்கள் 5 ஆம் நாள் (17. 2 1992) திங்கட்கிழமை வரையுள்ள பத்துத் தினங்களுக்கு

இலட்சார்ச்சனை நடைபெற்று

மாசித் திங்கள் 6 ஆம் நாள் (18. 2. 1992) செவ்வாய்க்கிழமை

ஏகாசீதி (81) கலசாபிஷேகம்

நிகழவும் தேவியின் திருவருள் வாய்க்கப்பெற்றுள்ளது

ஒரு நாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாத தேவிக்கு ஆயிரம் ஆயிரம் நாமங்களால் செய்யப்படும் அர்ச்சனை விழாவைத் தரித்து உய்தியடைய வேண்டுகின்றோம்.

வணக்கம்

10 - 01 - 1992

நிர்வாகசபை

### இலட்சார்ச்சனை கிரியாகால விபரம்

காலை

8. 00 மணி காலை சந்தி
8. 30 மணி சங்கற்பம்
8. 45 மணி நியாசம்
9. 00 மணி தீபாராதனை
9. 15 மணி அர்ச்சனை
10. 00 மணி ஹோமம்
10. 15 மணி திருமுறை பாராயணம்
10. 45 மணி திருவருட் பிரசாதம் வழங்கல்
11. 00 மணி உச்சிக்கால பூசை

மாலை

3. 00 மணி சாயரட்சை
3. 30 மணி சங்கற்பம்
3. 45 மணி சதுஷ்ஷஷ்டி உபசார பூசை
4. 00 மணி தீபாராதனை
4. 15 மணி அர்ச்சனை
5. 00 மணி ஹோமம்
5. 15 மணி திருமுறை பாராயணம்
5. 30 மணி பிரசாதம் வழங்கல்
6. 00 மணி அர்த்தசாமம்

### மாசிமக விசேட உற்சவம்

| | |
|---|---|
| அதிகாலை | 5. 30 மணி உஷத் காலம் |
| ,, | 6. 00 மணி மாசிமகத் தீர்த்தம் (துர்க்கா புஷ்கரணியில்) |
| ,, | 9. 30 மணி ஏகாசீதிகலச ஸ்நபன கும்ப பூசை |
| காலை | 7. 30 மணி திரவியாபிஷேகம் |
| ,, | 8. 30 மணி கலசாபிஷேகம் |
| ,, | 9. 00 மணி காலை சந்தி |
| ,, | 9. 30 மணி ஸ்வர்ண பத்ம புஷ்பார்ச்சனை |
| ,, | 11. 00 மணி திருவீதியுலா |
| | 11. 30 மணி ஆசார்ய சம்பாவனை ஆசீர்வாதம் |
| நண்பகல் | 12. 00 மணி உச்சிக்காலம் |
| ,, | 12. 30 மணி அன்னதானம் |

02010


## விசேட அறிவித்தல்

அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கு அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான

### போட்டிப் பரீட்சை -1992

1. மேற்படி பரீட்சை 15 - 02 - 1992ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.
2. அனுமதி அட்டைகள் 06 - 02 - 1992ல்-விண்ணப்பதாரிகளின் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது (இடம் பெயர்ந்த விண்ணப்பதாரிகள் தமது பகுதி தபால் நிலையத்துடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்).
3. அனுமதி அட்டைகள் இடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் பின்வரும் விபரங்களுடன் வடமாகாண கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.
   1. விண்ணப்பம் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டதாயின் தபால் நிலையத்தின் பெயர், அனுப்பப்பட்ட திகதி, பதிவுத் தபால் இலக்கம்.
   2. செயலகத்தில் கையளிக்கப்பட்டதாயின் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம்.
4. நேரசூசிகை :- 15 - 02 - 92 காலை 9. 00 - 10. 30 உளச்சார்பு
   15 - 02 - 92 காலை 10 .45 - 12 - 15 மொழித் தேர்ச்சி.
5. பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்க தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ தபாலதிபரால் வழங்கப்படும் செல்லுபடியான அடையாள அட்டை/ சாரதி லைசென்ஸ் இவற்றிலொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.
6. 1962ஆம் ஆண்டின் 25ஆம் இலக்கத்தைக்கொண்ட பரீட்சைகள் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆள் மாறாட்டம், பிரதிசெய்தல், முறையின்றி நடந்துகொள்ளல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் அனைவரும் நடவடிக்கைக்குள்ளாவர்.
7. போக்குவரத்து வசதியின்மையைக் காரணங்காட்டி பரீட்சை மண்டபங்களுக்கு பிந்தி வருதல் பரீட்சை விதிகளுக்கு மாறானவையாகும். எனவே பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட நேரத்துக்கு 10 நிமிடம் முன்பாக பரீட்சை மண்டபத்தில் ஒழுங்கு செய்த தங்கள் ஆசனங்களில் அமர்தல் வேண்டும்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர்/ மாவட்ட ஆணையாளர்,
யாழ். மாவட்டம்.

02011

# இனப் பிரச்சினை சமூகத் தீர்விலிருந்து அரசு ஒதுங்குகிறது?

## முடிவுகளை எடுக்கும் பொறுப்பு தெரிவுக்குழுவிடம் கையளிப்பு

இனப்பிரச்சினை தீர்வுக்கான எந்த ஒரு முயற்சியையும் இனி இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலமே மேற்கொள்வதென அரசு தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இக்குழுவின் தீர்மானத்திற்கமையவே அரசு இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நடவடிக்கைகளை இனி எடுக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் பத்திரிகையாளர் மகாநாட்டில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

பாராளுமன்ற தெரிவுக்குழு அனுமதி வழங்கினால் மட்டுமே இனி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்தப்படும் எனவும் அமைச்சர் ரணில் அங்கு தெரிவித்தார்.

பாராளுமன்ற தெரிவுக் குழுவின் முடிவே இனி இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வாக இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'இராமானுஜம்' கப்பல் மீண்டும் தலைமன்னார் வருகிறது

தலைமன்னார் - இராமேஸ்வரம் சேவையில் முன்னர் ஈடுபட்ட 'இராமானுஜம்' என்ற இந்தியப் பயணிகள் கப்பல் மீண்டும் தலைமன்னாருக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி வரவுள்ளது.

தமிழகத்தில் தங்கியுள்ள மன்னார்ப் பகுதியைச் சேர்ந்த 500 அகதிகளை ஏற்றிக் கொண்டே இக்கப்பல் இம்முறை இங்கு வரவுள்ளது.

## சேவைக்காலத்தில் பட்டம் பெற்ற ஆசிரியர் விவரம் சேகரிப்பு

ஆசிரிய சேவையில் சேர்ந்து 02. 01. 88 க்குப் பின்னர் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் அவர்கள் பட்டம் பெற்ற காலப் பகுதியையும், பட்டதில் அவர்கள் எடுத்த பாடங்கள் பற்றிய விவரங்களையும் தமக்கு அனுப்பிவைக்குமாறு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான அதிகாரிகளைக் கோரியுள்ளார்.

03. 01. 88 தொடக்கம் 31. 12. 88 வரை சேவையில் உள்ள போது பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை 01 01 89 தொடக்கம் 31 12. 89 வரை சேவையில் உள்ளபோது பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை 01 01. 90 முதல் 31. 5. 91 வரை சேவையில் உள்ள போது பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் அவரால் கோரப்பட்டுள்ளன.

பயிலுநர் ஆசிரியர்களாக இருந்து பட்டம்பெற்றவர்களின் விவரங்கள் இதில் அடங்கா. (15)

## 'சார்க்' மேலதிகக் கூட்டம் நடாத்த 'பிரேமா' விருப்பம்

'சார்க்' ஒரு நாள் கூட்டத்தை மேலதிகமாக நடாத்தும் யோசனை ஒன்றை சார்க் அமைப்பின் தற்போதைய தலைவரான ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

உச்சிமகாநாடுகளுக்கிடையே மேலதிகமாக ஒரு நாள் அலுவலகக் கூட்டத்தை நடாத்த வேண்டுமென அவர் கேட்டிருக்கிறார்.

## 500 டாக்டர்கள் 1200 தாதிகள் புதிதாக நியமனமாவர்

நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகளில் 500 வைத்தியர்களும், 1200 தாதிகளும் புதிதாக நியமிக்கப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் இந்த நியமனங்கள் பூர்த்தியாக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலக்கம் இல்லாத வாகனத்தில் சிங்களவர்த்தகரைக் கடத்தமுயன்ற இராணுவ அதிகாரி சிக்கினார்!

சிங்களவர்த்தகர் ஒருவரைக் கடத்திச் செல்ல முற்பட்ட இராணுவ அதிகாரி ஒருவர் பொதுமக்களினால் துரத்திப் பிடிக்கப்பட்ட சம்பவமொன்று கொழும்பு மாவட்டத்திலுள்ள நுகேகொட என்ற இடத்தில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

நிஸங்கடி சில்வா என்ற இந்த வர்த்தகர் அவரது வீட்டிலிருந்த சமயம் வாகனமொன்றில் சிவிலுடையில் ஆயுதபாணியாக வந்த இந்த இராணுவ அதிகாரி அவரைப் பலவந்தமாகக் கடத்திச் செல்ல முற்பட்டதாகவும் குடும்பத்தினர் கூக்குரலிடவே பொதுமக்கள் அவரைத் துரத்திப் பிடித்ததாகவும் சொல்லப்படுகிறது. அந்த வர்த்தகர் பிரமுகர் ஆளும் கட்சியைக் கடுமையாக விமர்சித்து வந்தவர் என்றும், இராணுவ அதிகாரி வந்த வாகனத்திற்கு இலக்கத் தகடு இருக்கவில்லை எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் தென் பகுதியில் இலக்கத் தகடு அற்ற வாகனங்கள் மூலம் பல ஜே. வி. பி. சந்தேக நபர்கள் கடத்தப்பட்டு பின்னர் காணாமற் போன சம்பவத்தில் இவ் அதிகாரியின் பங்களிப்பும் இருக்கலாமெனவும் கருத படுகிறது.

இவர் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# சிறிய செய்திகள்

## செயலக அணி தோல்வியுற்றது

யாழ். செயலக விளையாட்டுக்கழக அணிக்கும் அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடந்த சனிக்கிழமை அரியாலை மத்திய விளையாட்டுத் திடலில் இடம்பெற்ற 20 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சினேக பூர்வ மென்பந்து கிரிக்கெட் பந்தயத்தில் அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

யாழ் செயலக அணிக்கு புனர்வாழ்வுப் பணிப்பாளர் செ. பத்மநாதன் தலைமை தாங்கி ஆடினார். (16)

## ஆஸி அணிவெற்றி

அவுஸ்திரேலிய, இந்திய அணிகளுக்கிடையே நடைபெற்று வந்த சர்வதேச 5 நாள், கிரிக்கெட் போட்டியில் ஐந்தாவதும் இறுதியுமான போட்டியிலும் அவுஸ்திரேலியா 300 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது இப்போட்டித் தொடரில் அவுஸ்திரேலியா 4 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. ஒரு போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. (16)

## பகவத் கீதை வகுப்பு

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடத்தில் நாளை 9ந் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு, குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் அருளாசியுடன் 'பகவத் கீதை வகுப்பு' ஆரம்பமாகவுள்ளது.

பிரம்மஸ்ரீ சி. வெங்கடேஸ்வரசர்மாவினால் நடாத்தப்படவுள்ள இவ் வகுப்பு சனி, ஞாயிறு தினங்களில் மாலை 3 மணி முதல் நடைபெறவுள்ளதாக குருபீடாதிபதி ஸ்ரீமத் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

## பாஷையூரில்...

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடந்த செவ்வாய்க்கிழமை, நள்ளிரவு இடம்பெற்ற கொள்ளை முயற்சி அப்பகுதிமக்களினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

கதவுகள், அலுமாரிகள், தேவநற்கருணைப்பேழை என்பன இந்த முயற்சியின் போது சேதமாகின. திருடர்கள் எடுத்துச் செல்ல முற்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. காவற்துறையினர் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (16)

## செஞ்சிலுவைக் கிளைகள்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப் பிரிவுக் கிளையில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் பகுதிக் கிளைகள் அங்குரார்ப்பணம் செய்யவைக்கப்படுகின்றன. (

அரசியல் அவதானிப்புகள்:

# தமிழீழ ஆயுதப் போராட்டமும் சிங்கள இன ஆதிக்கமும்

எஸ் ஜி. எம்.

சிறிலங்கா பிரதம மந்திரியும், பாதுகாப்பு இணை அமைச்சருமான டி. பி விஜேதுங்க சில தினங்களுக்கு முன்பு கண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசும்போது 'தொண்டமான் சொன்னால் என்ன, வேறு யார் சொன்னால் என்ன விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கையளித்து ஜனநாயக வழிக்கு வந்தாலன்றி அவர்களுடன் பேச முடியாது என்று கூறியுள்ளார்.

சாதுவான மனிதர் போல் காணப்படும் பிரதமர் விஜேதுங்க ரஞ்சன் விஜேரத்ன பாணியில் மிரட்டல் தொனியில் பேசியுள்ளார்.

ஆயுதங்களைக் கையளித்தல், கீழே வைத்தல் என்ற நிபந்தனைகள் புதியன அல்ல. சிறிலங்கா அரசும் இந்திய அரசும் அடிக்கடி கூறி வந்த கூற்றுக்கள்தான்.

ஒரு இனத்தின் விடுதலைக்காகவே இந்த ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்கிறது. அதுவும் திடீரெனத் தமிழினம் ஆயுதப் போராட்டத்தில் இறங்கிவிடவில்லை சமஷ்டி என்ற ஜனநாயக அரசியல் ரீதியான கோரிக்கைகள் சிங்கள இன ஆதிக்க வர்க்கத்தினால் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டமையினாலேயே தமிழீழக் கோரிக்கை எழுந்தது.

தமிழீழக் கோரிக்கை கூட ஜனநாயக மிதவாத அரசியல் அமைப்பான தமிழர் விடுதலைக் கூட்டணியினாலேயே முன்வைக்கப்பட்டது இவர்களதும், இதேகொள்கையைக் கொண்ட கட்சிகளின் ஜனநாயக, சமாதான மற்றும் அகிம்சை வழிகள் தோல்வி கண்ட இடத்திலிருந்துதான் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தது. அதுவும் அகிம்சைப் போராட்டத்தை ஆயுத முனையில் அரசு அடக்கியபோதுதான் உருவானது விடுதலைப் போராட்டங்களிலும், ஆயுதப் போராட்டங்கள் புதியனவல்ல. பல நாடுகளே ஆயுதப் போராட்டங்களினால்தான் விடுதலை பெற்றிருக்கின்றன.

உலகளாவிய ஆதரவு பெற்ற பாலஸ்தீன விடுதலை இயக்கம், ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் என்பன அகிம்சையை மட்டும் கொள்கையாகக் கொண்டவை அல்ல. தென்னாபிரிக்காவின் ஆட்சியில் கறுப்பர் இன ஜனநாயகம் நடைமுறைக்கு வரக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டும் கூட, முழுமையாக இது நிறைவேறி கறுப்பர் பெரும்பான்மை ஆட்சி ஏற்படுத்தப்பட்ட பின்புதான் தாம் ஆயுதங்களைக் கீழே போடுவோம் என ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கடந்த டிசம்பர் மாதத்தில் மீண்டும் வலியுறுத்தியது.

தமிழீழத்தின் அண்டை நாடான இந்தியாவை எடுத்துக் கொண்டால் அசாமிலும், திரிபுராவிலும், டார்ஜிலிங் மலைப் பிரதேசத்திலும், பாஞ்சாபிலும், ஜம்மு காஷ்மீரிலும் ஆயுதப் போராட்டங்கள் நடந்தன, நடக்கின்றன.

திரிபுராவில் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்பே ஆயுதங்களைப் போராளிகள் கீழே வைத்தனர், டார்ஜிலிங் மலைப் பிரதேச விடுதலை கோரி சுபாஷ்கீசிங் தலைமையில் போராடிய கூர்க்கா தேசிய கவுன்சில் யுத்த நிறுத்தம் செய்து பிரச்சினைகளுக்குத் தீர்வாக டார்ஜிலிங் மலைப் பிரதேச அபிவிருத்திக் கவுன்சில் அமைப்பதற்கான இணக்கம் கண்ட பின்பே ஆயுதங்களைக் கீழே வைத்தது.

ஆகவே, எந்த நோக்கத்திற்காக ஆயுதங்கள் எடுக்கப்பட்டனவோ அது நிறைவேறாத நிலையில் ஆயுதங்களைக் கீழே வைக்கக் கோருவது நோய்க்குப் பரிகாரம் காணாது நோயாளியையே கொல்வதற்கு ஒப்பாகும்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையிலும் கூட ஆயுதப் போராட்டத்தைக் கைவிட மாட்டோம் எனக் கூறவில்லை. தமிழீழ மக்களின் கோரிக்கை நிறைவேறும் பட்சத்தில் ஆயுதங்களைக் கைவிடுவது பிரச்சினையாக வராது என்ற நிலையைக் காலத்துக்குக் காலம் அவர்கள் வெளிப்படுத்தி வந்துள்ளனர்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களே ''நாம் சமாதானத்திற்கும் தயார், போருக்கும் தயார், இனத் துவேசிகளும் அல்லர், போர் வெறிகொண்ட வன்முறையாளர்களும் அல்லர்'' என்று கூறியுள்ளார்.

இந்த இரண்டு வசனங்களிலுமே சமாதானம், போர் இனத் துவேசம், வன்முறை எனும் பல அம்சங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. இப்படியிருக்கையில் சிங்கள பேரின ஆதிக்கம் தமிழீழ மக்களின் உரிமைகள், கோரிக்கைகள் பற்றிப் பேசாமல் ஆயுதங்களைப் பற்றி மட்டும் பேசுவது உலகத்தை ஏமாற்றுவதற்காகவே.

அதேநேரம், இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களை அடிமைப்படுத்தலாம் என்ற தப்புக் கணக்கினாலுமேயாகும் புலிகளை நம்ப முடியாது என்றும் பிரதமர் கூறியிருக்கிறார் சிங்கள அரசுகள் எந்தக் காலத்தில் தமிழ் மக்கள் நம்பத் தகுந்ததாக நடந்துள்ளன?

பரஸ்பரம் நம்பிக்கையீனம் இருப்பது உண்மையாகவே இருந்தாலும், அரசு என்ற வகையில் பேச்சுக்களுக்கான முன் முயற்சிகளை மேற்கொள்ளுவது அதன் கடமையே, அந்தக் கடமையைச் சிறிலங்கா அரசு வசதியாகத் தட்டிக் கழிக்கிறது என்பதை [illegible] பிரதமரின் பேச்சு கட்டி நிற்கிறது.

## பாதுகாப்பு இல்லாத அணு ஆயுதம் ஐரோப்பிய நாடுகள் அச்சம்

அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகள் முன்னாள் சோவியத் யூனியனில் பாதுகாப்பாக வைக்கப்படவில்லை என ரஷ்ய அணுத்துறை அறிவியலாளர் பிராவ்டாவுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

செர்னோபில் முன்பு நடந்த அணுவிபத்து போன்று பல விபத்துகள் ஏற்படவாய்ப்பு உண்டென்று அவர் எச்சரித்துள்ளார்,

ரஷ்யாவின் அணு ஆயுதங்கள் மிகப்பழமை வாய்ந்தமையினால் அவை பழுதடைந்துள்ளன. எனவும் இந்த நிலையில் இவற்றைப் பேணுவதற்கு பயிற்சிபெற்ற அணுசக்தித் துறை ஊழியர்கள் பற்றாக்குறையாயுள்ளனர் எனவும், அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் அணு ஆயுதங்கள் பாதுகாப்பாக உள்ளன என பொரிஸ் யெல்சின் தெரிவித்ததை நம்பமறுக்கும் ஐரோப்பிய நாடுகள் மோசமான ஆபத்து ஏற்படும் என அச்சமடைந்துள்ளன என்று பி. பி. ஸி. தெரிவித்தது,

## சர்வாதிகாரம் தோன்றும் யெல்சின் எச்சரிக்கை

சோவியத் யூனியனிலிருந்து பிரிந்துள்ள நாடுகளுக்கு மேற்குலக நாடுகள் பொருளாதார உதவிகளை வழங்காவிட்டால் ரஷ்யாவில் மீண்டும் ஒரு சர்வாதிகாரி தோன்றுவார் என ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் எச்சரித்துள்ளார்.

பிரான்சுக்குச் சென்றிருக்கும் யெல்சின் கடந்த இரு நாள்களாக பல தலைவர்களுடனும் உரையாடிய போது இதனையே வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவின் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு அமெரிக்க சார்பு நாடுகள் உதவா விட்டால் சர்வாதிகாரம் தோன்றுவதைத் தவிர்க்க முடியாதென்பதை அவரது பேச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை ரஷ்யாவுக்கு அவசர உணவுப் பொருள்கள் அனுப்புவதாகத் தெரிவித்த அமெரிக்காவிடமிருந்து இன்னும் அவை அனுப்பிவைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது,

## சுங்கப்பகுதி அபராதம் நீதிமன்றத்தால் தள்ளுபடி

தங்கக்கடத்தல் தொடர்பாக சுங்கப்பகுதி விதித்த 8 மில்லியன் ரூபா அபராதத்தை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

கண்டியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் 5596 கிராம் தங்கத்தை நாட்டினுள் கடத்தியதற்காக சுங்கப்பகுதி இந்த அபராதத்தொகையை விதித்தது.

இதனை ஆட்சேபித்து அந்த வர்த்தகர் செய்த மனுவை விசாரணை செய்த துறைமுக நீதவான் இவ்வாறு தீர்ப்பளித்தார்.

## முக்கிய கலந்துரையாடல்

நாளை 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை. மாலை 3 00 மணிக்கு யாழ் மாவட்டத்தில் கடமையாற்றும் சகல பிரிவுச் செயலாளர்களையும், கிராம சேவை அலுவலர்களையும் கலந்துரையாடல் ஒன்றுக்கு, யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சமுகமளிக்கும்படி யாழ் அரசாங்க அதிபர் சா. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார். 06

### இந்திய...

குழுவினர் ஒரு வாரகாலத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

### செஞ்சிலுவைத்...

களே இவ்வாறு ஆர்ப்பாட்ட ஊர்வலம் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து புதிய தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டு மருத்துவமனையில் பணிபுரிவதும் குறிப்பிடத்தக்கது. 06

### தற்போதைய—

அவர் நாட்டின் தற்போதைய பிரச்சினையை தீர்க்க கட்சிகள் முட்டுக்கட்டையாக இருப்பதைத் தடுக்க இக் கட்சி அமைப்பு முறை மாற்றங்கள் அவசியமானவை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## வாராந்த கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும இடம்பெறும்வாராந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 9ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவிலுள்ள கலை, பண்பாட்டுக்கழக தலைமைச்செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

இவ்வார அமர்வில் திரு அ யேசுராசா ''எனது கலை இலக்கியத் துறை அனுபவங்கள்'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார். அனைவரும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

### கிராம...

தாக அரச அதிபர் தெரிவித்தார்.

தற்பொழு நடைபெற விருக்கும் அரச எழுதுவினைஞர்களின் பரீட்சை முடிவுற்றதும் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளபபட விருப்பதாகவும் அவர் தெரிவித்தார் (6)


## அறிவித்தல்

S. S. R. தேங்காய் எண்ணெய் ஆலை இயந்திரம் பொருத்தி மீண்டும் வேலை ஆரம்பித்து உள்ளோம் என்பதை வாடிக்கையாளருக்கு தெரிவித்துள்ளோம்.

**S. S. R. தேங்காய்எண்ணெய் ஆலை**
1-ம் கட்டை, டச்சுவீதி,
சாவகச்சேரி.

02012


# சிங்கப்பூர், பாங்கொக்கில் பல இலங்கைத் தமிழர்கள்

ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்காக வெளிநாட்டு முகவர்களால் அனுப்பப்பட்ட பல இலங்கைத் தமிழர்கள் சிங்கப்பூர், பாங்கொக் போன்ற இடங்களில் ஹோட்டல்களில் மாதக்கணக்காக தங்கியிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் பயணச் செலவாக பல லட்சம் ரூபாவை இந்த முகவர்களுக்கு செலுத்தியுள்ளதாகவும தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூர், பாங்கொக்கில் இருந்து குறிப்பிட்ட நாடுகளுக்குச் செல்ல முடியாத பல தமிழர்கள் கொழும்பு திரும்பி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 06

## ஸ்பெயினில் குண்டு வெடிப்பு

ஸ்பெயின் தலைநகர் மெட்ரிட்டில் கார் குண்டு வெடித்ததில் இராணுவ வாகனத்தில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் ஐவர் கொல்லபபட்டுள்ளனர்.

இராணுவ வாகனம் சென்றுகொண்டிருந்தபோது வீதியில் நின்றிருந்த வாகனம் ஒன்றிலிருந்த குண்டு வெடித்ததினால் ஏற்பட்ட பாதிப்பில் 3 இராணுவ அதிகாரிகளும் ஒரு சிப்பாயும் ஒரு சிறறூழியரும் கொல்லப்பட்டதாக ஏஜென்சி செய்தி தெரிவித்தது.

பிரிவினைவாத இயக்கமான இற்றா (ITA) அமைப்பே இக் குண்டு வெடிப்புக்குக் காரணமாயிருக்கலாம் என நம்பப்படுவதாக அச் செய்தி தெரிவித்தது.

இதனால் இவ்வருடம் ஸ்பெயினில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டு விழாவும் பொருட்காட்சி விழாவும் நடைபெறுமோ என்ற சந்தேகம் எழுந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆசிரியர் விவரம் அறிவிப்பு

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் 36 தொண்டர் ஆசிரியர்களின் விவரங்கள் சாவகச்சேரி உதவிக் கல்விப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்டுள்ளன.

இத் தொண்டர் ஆசிரியர்கள் பற்றிய முறையீடுகள் இருப்பின் தெரிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (16)

## தும்புத் தொழில் உற்பத்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் தும்புத் தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தமிழீழ ஆய்வு நிறுவனம் கடமடு நகரில் தும்புத் தொழிற்சாலை ஒன்றை அமைத்து இயக்கி வருகிறது

இங்கு கயிறு திரித்தல், தும்புத்தடி செய்தல், கால் துடைப்பம் தயாரித்தல் போன்றன மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

மேலும் பலருக்கும் பயிற்சி வழங்கப்பட்டு இங்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.

## வடகொரியா சம்மதித்தது

வடகொரியா தனது அணு நிலையங்களை அனைத்துலக அணுசக்தி நிறுவனம் பரிசோதனை செய்வதற்கு சம்மதம் தெரிவித்து உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டது.

அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் 1985 இல் ஒப்பமிட்ட வடகொரியா ஆறு ஆண்டுகளின் பின் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வடகொரியா அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து வருவதாக அமெரிக்கா குற்றம் ...வருவது தெரிந்ததே.

### போட்டோஸ்ரட் பிரதியாக வழங்கப்படும்

# 1954 ஒகஸ்ட் மாதத்தின் பின் பிறந்தோருக்கு பிறப்புச்சான்றிதழ்

அவசர தேவைகளின் பொருட்டு பிறப்புச் சான்றிதழ் பெற விண்ணப்பித்த 1954 ஒகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் பிறந்தவர்களுக்கான பிறப்பு சான்றிதழ்களை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

போட்டோஸ்ரட் பிரதியாக வழங்கப்படவுள்ள இப்பிறப்பு சான்றிதழைப் பெற 11 ரூபாவை கட்டணமாக செலுத்த வேண்டும்.

இச்சான்றிதழுக்கு விண்ணப்பித்தவர்கள், விண்ணப்பிக்க விரும்புவோர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்மாவட்ட மேலதிக பதிவாளர் அ பொன்னம்பலம் கேட்டுள்ளார்.

## பஞ்சாப்பில் தேர்தல் மத்திய அரசின் சூழ்ச்சியாம்

பஞ்சாப்பில் மத்திய அரசுக்கு தலையாட்டும் ஒரு பொம்மை அரசாங்கத்தை ஏற்படுத்தவே மத்திய அரசு இத்தேர்தலை நடத்துவதாக பல சீக்கிய அரசியல் வாதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர், தேர்தல் நேர்மையாக நடைபெறாது என அவர்கள் அவநம்பிக்கையை வெளியிட்டுள்ளனர் இதனால் பல அரசியல் வாதிகள் தேர்தலைப் புறக்கணித்துள்ளதாக ஏஜென்ஸி செய்தி தெரிவித்தது.

ஐந்து வருட ஜனாதிபதி ஆட்சியின் பின்னர் நடைபெறும் இத்தேர்தலில் பணியாற்றுவோர் தம்மை காப்புறுதி செய்துகொள்ள வேண்டுமெனவும் சுட்டிக்காட்டியிருப்பதாகச்செய்தி தெரிவித்தது'

### கூட்டு ஒப்பந்தத்தில்

# ரஷ்யாவும் பிரான்சும் கைச்சாத்திட்டன

ரஷ்யாவும் பிரான்சும் கூட்டுறவு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

பிரான்சுக்கு வந்திருந்த ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சினின் விஜயத்தின் முடிவில் இவ்வொப்பந்தம் கைச்சாத்தானதாக பி, பி, ஸி. தெரிவித்தது.

இருநாடுகளின் அணு ஆயுதங்களைத் தேவைக்கு ஏற்ப குறைந்தளவு வைத்திருக்கவும் ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றுஏற்பட இரு நாடுகளும் பாடுபடவும்— ரஷ்யாவில் சந்தைப் பொருளாதாரம் கொண்டுவர பிரான்ஸ் உதவி செய்யும் எனவும் —

இருநாட்டுத்தலைவர்களும் ஆண்டு தோறும் சந்தித்துப் பேசவும் ஒப்பந்தம் வழிசெய்கிறது.

மேற்குலக நாடு ஒன்றுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே ஏற்பட்ட முதல் ஒப்பந்தம் இது வென பி பி ஸி, மேலும் தெரிவித்தது

## விவசாயிகளுக்கு கெயர் உதவிகள்

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு மா சி போ க விவசாயிகளுக்கு கெயர் யு எஸ். திட்டத்தின் கீழ் 350 இலவச மண்வெட்டிகளை வழங்கியுள்ளதாக செயலாளர் கே கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்

இவர்களுக்கு வாராந்தம் மூன்று லீற்றர் மண்ணெண்ணையும் மற்றும் பயறு. கௌபி, மரக்கறி விதைகளும் வழங்கபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார் 06

## சீனா எதிர்க்கிறது

அணு ஆயுதக் குறைப்பு செய்ய வேண்டுமென்ற ரஷ்ய ஜனாதிபதியின்கோரிக்கையை சீனா ஏற்க மறுத்திருக்கிறது

ரஷ்யாவும் அமெரிக்காவும் அணு ஆயுதத் தயாரிப்புகளையும அவற்றின் பரிசோதனைகளையும் நிறுத்துவது மட்டுமின்றி சீனாவின் அணு ஆயுதக் கையிருப்பிற்கு ஏற்ப அமெரிக்காவும் ரஷ்யாவும் குறைக்க வேண்டுமெனவற்புறுத்திய சீனப் பிரதமர் அதன் பின்பு தான் அணு ஆயுதக் குறைப்பு பற்றி சிந்திக்கும்எனத் தெரிவித்தார்.

## உ. அ. அதிபர் அலுவலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் பழைய பூங்கா வீதிக்கு இடமாற்றப்பட்டுள்ளது

இதுவரை 4ஆம் குறுக்குத் தெருவில் இந்த அலுவலகம் இயங்கிவந்தது. 25

## முதற்பரிசு கிடைத்தது

கல்வி அமைச்சு அகில இலங்கை ரீதியில் நடத்திய கட்டுரைப் போட்டியில் தமிழ் மொழிஉயர்பிரிவில் பருத்தித்துறை வேலாயுதம்மகாவித்தியாலய மாணவன் செல்வன் செ.ஸ்ரீதரன் முதலாம் பரிசை பெற்று கொண்டார். 11

## இந்தியகாஷ்மீரில் பதட்டநிலை

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி தனது தொண்டர்களுடன் அஸாத் காஷ்மீர் எல்லை தாண்டி இந்தியப் பிரதேசத்துக்குள் நுழையப் போவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து இந்திய காஷ்மீர் எல்லையோரங்களில் பதட்ட நிலை தோன்றியிருப்பதாக அறிய முடிகிறது.

...ப்பத்திரிகை ... லி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் ...றுவனத்தி... கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'கில் ...ான அச்ச... 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.